## 71. எனக்காக யுத்தம் செய்யும்

### பல்லவி

எனக்காக யுத்தம் செய்யும்
தேவன் நீரே என் தேவன் நீரே
என் சார்பில் வழக்காடும்
ராஜன் நீரே என் ராஜன் நீரே

### அனுபல்லவி

*சும்மா இரு உனக்காய் யுத்தம் செய்யுவேன்*
*என்று வாக்கு உரைத்தவரே*

### சரணங்கள்

1. எனக்கு விரோதமாய் உருவாகும்
எந்த ஆயுதங்கள் வாய்க்காதே
எனக்கு விரோதமாய் எழும்பும் நாவை
நியாயத்தில் நான் குற்றப்படுத்துவேன்
- எனக்காக யுத்தம்

2. தேவபிள்ளைக்கு விரோதமாக
மந்திரம் ஒன்றும் வாய்க்காதே
ஜெபிப்பவனுக்கு விரோதமாக
பிசாசின் தந்திரம் வாய்க்காதே
- எனக்காக யுத்தம்

3. வெள்ளம் போல் எனக்கு எதிராய்
சத்துரு எதிராக வந்தாலும்
ஆவியானவர் முன்நின்று
வெற்றி கொடியை ஏற்றிடுவார்
- எனக்காக யுத்தம்